RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# புறநானூற்றில் நிமித்தங்கள்

## மு. துர்கா தேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி-627011, இந்தியா

# A Study of Omens in Purananuru

## M. Durga Devi [a, *]

[a] Department of Tamil, Sadakathullah Appa College, Tirunelveli-627011, India

* Corresponding Author:

**ABSTRACT**

From ancient times, human beings have lived in close harmony with nature, and changes in the natural environment have often influenced their thoughts, emotions, and behavior. This intimate relationship between humanity and nature gave rise to various beliefs and practices. The customs and traditions that ancient people followed according to their convictions, without necessarily distinguishing between good and bad, gradually evolved into systems of belief. Among these, omens and portents occupied a significant place in the cultural life of early societies. Ancient Tamils attached great importance to interpreting signs and omens, believing that they could indicate the outcome of future events or provide guidance in making important decisions. Such beliefs became deeply embedded in their everyday life and cultural practices. Purananuru, one of the major anthologies of Sangam literature, preserves valuable references to these beliefs, reflecting the worldview and traditional practices of ancient Tamil society. This article examines the concept of nimitham (omens) as portrayed in Purananuru, highlighting its cultural significance and its role in shaping the beliefs and daily life of the ancient Tamils.

**Keywords:** Tamil literature, Omens, Purananuru, Ancient Tamil, Sangam literature,

## முன்னுரை

பண்டைய காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடியைந்த மனித வாழ்வில் நம்பிக்கைகள் தோன்றலாயின. அன்றைய மனிதர்கள் நன்மை, தீமை எதுவும் கருதாமல் தாம் கொண்ட விருப்பத்திற்கேற்ப கடைபிடித்து வந்த ஒழுகலாறுகளே நம்பிக்கை ஆகும். நம்பிக்கைகளுள் முதன்மையாக இடம்பெறுவன சகுனங்களும், நிமித்தங்களுமாகும். பண்டைத் தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள நிமித்தம் பார்த்தல் எனும் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

## நிமித்தம் பற்றிய நம்பிக்கைகள்

நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியிடுகளின் வழியாக முன்னுணர்வதாகும். இது இன்று சகுனம் எனக் குறிக்கப்படுகிறது. நிமித்தம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் இடம்பெறவில்லை. ஆனால் 'புள்' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. ஆனால் தொல்காப்பியர் கால முதற்கொண்டே நிமித்தங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. செயல்களில் நிகழும் நன்மை தீமைகளை பற்றி முன்னதாகவே அறிய கூடியதாகும். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் நிமித்தங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

“தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி

மன்னும் நிமித்தம் மொழிப்பொருள்

தெய்வம் நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று” (தொல் :பொருள் :நூ.எ.39)

நம்பிக்கை என்பது நிமித்தங்கள் கொண்டு அமைந்தவை. நாம் செய்யவிருக்கும் வேலையையும், இயற்கையின் சூழ்நிலைகளையும் இணைத்துக் காட்டுவதாக நிமித்தங்கள் காணப்படுகின்றன. நிமித்தக் கூறுகள் பெரும்பாலும் கீழ்க்கண்ட ஐந்து நிலைகளில் வெளிப்படுவதாக ஆங்கிலக் கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

வானத்தில் ஏற்படும் மாற்றங்களான இடி, மின்னல் மற்றும் விண்மீன் வாயிலாக வெளிப்படுதல்.

பறவை நிமித்தங்கள் அவை பெரும்பாலும் பறவைகள், பறக்கும் திசைகள் மற்றும் அவற்றின் ஒலிகளின் அடிப்படையில் நிச்சயித்தல்

மிருகங்கள் மற்றும் வாலுள்ள ஊர்வனவற்றின் ஓசையிலிருந்து நன்மை தீமைகளை நிச்சயித்தல்.

இயற்கைக்கு மாறுபட்ட செயல்கள் நிகழ்த்தல் அவை பெரும்பாலும் ஊறு விளைவிக்கக்கூடிய அறி குறிகளாகத் தென்படுதல்.

பறவைகளுக்குத் தீனிபோடும் நிலையில் அவை தீனியைப் பெறும் தன்மை கொண்டு நன்மை தீமைகளை நிச்சயித்தல் என ஐவகையாகப் பகுத்துக் கூறப்பட்டுள்ளது.

இறுதியாகச் சுட்டப்பட்டதை தமிழர் பண்பாட்டு நிலையில் காணமுடிவதில்லை. மேற்கூறிய பகுப்பின் மூலம் இனப்பாகுபாடு மற்றும் பண்பாட்டு மரபுக்கு ஏற்ப நிமித்தங்களும், கூறுகளும் மாறுபடும் தன்மை கொண்டவை என்பதை உணர முடிகிறது.

## நிமித்தம் பார்த்தல்

பறவைகளைக் கொண்டு சகுனம் பார்ப்பது தமிழர் வழக்கம். இதனைத் தொல்காப்பியரும்,

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்” (தொல்.பொருள்.நூ.எ.88)

என்று புறத்திணையியல் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். இச்சகுனம் பார்க்கும் நிலையினை,

“நாள் அன்று போகிப் புள் இடை தட்ப” (புறம்:124)

என்று புறநானூறு பாடல் ஒன்று உணர்த்துகின்றது.

## புள் நிமித்தம்

புள் நிமித்தத்தைத் தொல்காப்பியர் நிமித்த வகைகளில் ஒன்றாகக் கூறியுள்ளார்.

'மாவும் புள்ளும் ஐயறி வினவே பிறவும் உளவும் அக்கிளைப் பிறப்பே” (தொல்: பொருள்.நூ.எ.576)

அவர் ஐயறிவுடைய உயிர்களில் ஒரு வகையினதாகிய பறவைகளைப் புள் என்றே சுட்டியுள்ளார். சிற்சில பறவை விலங்குகளின் காட்சியும் அவற்றின் குரல்களும் நன்மை தீமைகளை அறிவிக்கும் என நம்பியுள்ளனர். வல்வில் ஓரியைக் கழைதின் யானையார் பாடிச் சென்றபோது பரிசில் கிடைக்கவில்லை. அதற்கு தாம் புறப்பட்ட வேளையையும் எதிர்ப்பட்ட புள்ளையும் நோவது தவிர, மன்னனை நோவது பயனற்றது என்று கருதினர். இதனை,

'புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை,
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்; அதனால்
புலவேன் வாழியர், ஓரி (புறம்:204)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

## ஆந்தை அலறல்

போரில் புண்பட்ட வீரனொருவனை அவன் மனைவி வீட்டில் வைத்து காப்பாற்ற முயல்கின்றாள். அவன் இறந்து விடுவான் என்பதற்கு அறிகுறியாகப் பல நிமித்தங்கள் தோன்றுகின்றன. அதில் ஆந்தை அலறலும் ஒன்று. இதனை,

“அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றம்” (புறம்: 280)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

## விரிச்சி கேட்டல்

விரிச்சி என்பது ஒருவர் பேசும்பொழுது அசரீரிபோல தமக்கு அறிவிப்பாக வரும் நிலையாகும். முல்லைப் பாட்டு இந்நிலையினை, 'ஆய்ச்சியர் கன்றை நோக்கி, இதோ உன் தாயார் வருகுவர் எனக் கூறியமொழி கேட்டு உன் தலைவன் விரைவில் வருவான்' என முதுபெண்டிர் கூறினர் என்று தெளிவுப்படுத்துகின்றது.

புறத்திணையில் ஆநிரை கவர வீரர்கள் விரிச்சிக் கேட்டு புறப்படும் பொழுது வெட்சிப்பூ, தினை, ஆட்டுக் கடாவின் குருதி போன்றவற்றைத் தெளிப்பர் என்பதை,

"செங்கால் வெட்சியும் தினையும்

காஉய் மறிக்குரல் குருதி மன்று

துகளவிப்ப விரிச்சி ஓர்ந்து" (புறம்:300) என்று புறநானூறு சுட்டுகின்றது.

## தீ நிமித்தம்

இயற்கை நிகழ்வுகளில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு அது தீய சகுனத்திற்கு உரியது என்று நம்பினர்.

"மைந்துடை யானை கைவைத் துறங்கவும்

திண்பிணி முரசும் கண்கழிந்து உருளவும்' (புறம்:229)

என்று சேரமான் கணைக்கால் இரும்பொறை, மன்னன் இறப்பதற்கு முன் இயற்கையில் நடந்த இந்நிகழ்சிகள் தீ நிமித்தங்களாக இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளது.

## நாள் கோள்

நல்ல நாளினையும், கோள் நிலையினையும் கணக்கில் கொண்டு தமிழர் அன்றாட வாழ்வை நிகழ்த்தினர். சங்ககால மன்னர்கள் போர் தொடங்கும் முன் நல்ல நாளில் வெண்கொற்றக் குடையையும் வாளினையும் போர்க்களத்திற்கு அனுப்பி வைத்தனர். இந்நிலை குடைநாட்கோள், வாள் நாட் கோள் என்று குறிப்பிடப்படுவதாக,

"குடையும் வாளும் நாட்கோள் அன்றி"

(தொல்:பொருள் : புறம் :13)

என்ற தொல்காப்பிய நூற்பா வாயிலாக அறிய முடிகின்றது.

## நாள் கோள் பற்றிய நம்பிக்கைகள்

தாங்கள் செய்யும் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் நாள் கோள் பார்த்தலை மக்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். மக்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒருநாள் மீன் நிலை பெற்றுள்ளதாகவும் அவருடைய வாழ்க்கை முடிந்தவுடன் அந்த மீனும் அழிந்துவிடும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது. இதனை,

"கொற்றநிள்குடைக் கொடித்தேரிச்

செழிய நின்று நிலைஇயர் நின்நாள்

மீன் நில்லாது படாஅச் செவீஇயர்,நின்பகைவர் மீனே" (புறம்:24) என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

## பிறவி பற்றிய நம்பிக்கை

மனிதனுக்கு மறுபிறவி மற்றும் ஏழு பிறவி உண்டு என்ற நம்பிக்கை பண்டு தொட்டு இருந்து வருகின்றது. இறப்பிற்குப் பின்னர் செய்த வினைக்குத் தகுந்தவாறு உயிரானது சொர்க்கம் (அ) நரகத்தைச் சென்றடையும் என்று நம்பினர். அன்பும் அருளும் இல்லாதவர் நரகத்தைச் சென்றடைவர்,

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா

நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்" (புறம்:5)

என்றும்,

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்" (புறம்:134)

என்றும் புறநானூறு எடுத்துக்காட்டுகின்றது.

## சுவர்க்கம் பற்றிய நம்பிக்கை

சமுதாய நலன் கருதி பிறருக்காக வாழ்ந்து தம் உயிரைத் துறந்தவர்கள், பிறர் வாழ தாம் வாழ்ந்தவர்கள், பிறருக்காகத் தம் இன்னுயிரை நீத்தவர்கள், சமுதாயக் கடமைகளைச் செய்தவர்கள் வானுலகத்தில் வாழும் தேவர்களுக்கு இணையாக வாழ்வர் என்ற நம்பிக்கை இருந்தது. புறநானூற்றுப் பாடலிலும் போரிட்டு மடிந்த வீரர்கள் புகழ் பெற்று சுவர்க்கத்தில் வாழும் பேறு பெற்றனர் என்பதை,

"நின் பகைவர் நினனொடு மாற்றார்

என்னும் பெயர்பெற்று ஆற்றார் ஆயினும் ஆண்டு வாழ்வோரே" (புறம்:4)

## முடிவுரை

புறநானூற்றில் நிமித்தம் என்பது வெறும் மூடநம்பிக்கையாக அல்லாது, அரசியல் முடிவுகள், போர்க்காலத் தீர்மானங்கள் மற்றும் வாழ்வியல் செயற்பாடுகளோடு இணைந்திருந்த ஒரு சமூகக் கருத்தாக்கமாகக் காணப்படுகிறது. பறவைகளின் பறத்தல், விலங்குகளின் ஒலி, இயற்கை மாற்றங்கள் போன்றவை நன்மை - தீமையின் அறிகுறிகளாகப் புரிந்து கொள்ளப்பட்டன. இந்நம்பிக்கை, மனிதன் இயற்கையோடு கொண்டிருந்த நெருங்கிய உறவை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், நிமித்த நம்பிக்கைகள் வீரத்தையும், அச்சத்தையும், எதிர்பார்ப்பையும் ஒருங்கே பிரதிபலிக்கின்றன. போருக்கு முன் நல்ல நிமித்தம் காணுதல் அரசருக்கும் வீரருக்கும் மன உறுதியை அளித்தது தீய நிமித்தம் எச்சரிக்கையாகக் கருதப்பட்டது. இதன் மூலம் நிமித்தம் என்பது மனவலிமையையும் சமூக ஒழுங்கையும் கட்டுப்படுத்திய உளவியல் கருவியாக இருந்தது என்பதை உணர முடிகிறது.

ஆகவே, புறநானூற்றில் நிமித்தம் என்பது தனித்த நம்பிக்கைக் கூறாக இல்லாது, சங்கச் சமுதாயத்தின் அரசியல்-பண்பாட்டு வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த ஒரு வாழ்வியல் அடையாளமாகும். அது இயற்கையையும் மனித வாழ்வையும் இணைக்கும் சிந்தனைப்; பாலமாக விளங்கியது என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

## References

இளம்பூரணர் (2011) தொல்காப்பியம் பொருளாதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.

புலியூர்க்கேசிகன், (2010), புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License